**Kanton Bern**
**Canton de Berne**

Bildungs- und Kulturdirektion
Amt für Kindergarten, Volksschule und Beratung
Abteilung Erziehungsberatung

# EB

## பெற்றோருக்கான வழிகள (Wege für Eltern)

உங்கள் பிள்ளையின் அபிவிருத்தி குறித்து நீங்கள் கவலைப்படுகின்றீர்களா? உங்கள் பிள்ளை முன்புபோல் மகிழ்ச்சியாக இல்லையா? குடும்பத்திற்குள் அழுத்தங்கள் உள்ளதா? உங்கள் பிள்ளைக்குப் பாடசாலையில் பிரச்சினைகள் உள்ளதா? நாங்கள் உங்களுக்காக உள்ளோம்.

சண்டை, சச்சரவு, கீழ்ப்படியாமை, பயம் அல்லது பாடசாலைப் பிரச்சினைகள் குடும்ப வாழ்விற்கு அழுத்தம் கொடுப்பதுடன் பெற்றோரைத் தடுமாறச் செய்கின்றது. உங்கள் குடும்பத்தில் சிலவேளையில் ஒரு பிரிவு நடந்திருக்கலாம் அல்லது உங்கள் பிள்ளைக்கு ஒரு பிரச்சினையான நிலைமை ஏற்பட்டிருக்கலாம். பல குடும்பங்கள் இவ்வாறான விடயங்களைச் சந்திக்கின்றது. நாங்கள் உங்களுக்கு உதவுகின்றோம்.

### இவ்வாறு நாங்கள் ஒன்றுசேர்ந்து செயற்படுகின்றோம்

ஒரு முதல் கலந்துரையாடலில் உங்களுடன் சேர்ந்து உங்கள் விடயம் குறித்து ஆராய்வோம். இதன்போது உங்கள் அனுபவங்கள், கவலைகள் மற்றும் தீர்வுக்கான உங்கள் யோசனைகள் குறித்து நாம் ஆர்வம் காட்டுவோம். சிலவே-வளைகளில் உங்கள் பிள்ளையுடனும் தனிமையில் பேசுவோம். அதன்பின் நாம் ஒன்றுசேர்ந்து இயலுமான தீர்வு வழிகள் குறித்து கலந்துரையாடுவோம். பிரச்சினையான நிலைமைகளில் உங்களையோ அல்லது உங்கள் பிள்ளை-யயோ நீண்டகாலத்திற்கு ஆலோசனை அல்லது உளவளச் சிகிச்சை வழங்கி உதவுவோம். தேவைப்படின் உங்கள் அனுமதியுடன் மேலதிக துறைசார் நபர்களை இதற்காக அழைத்துக் கொள்வோம். பாடசாலையில் பிரச்சினைகள் இருந்தால் உங்களுடன் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதுடன் உங்கள் பிள்ளைக்கான பாடசாலை நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவோம்.

### இதன்மீது நீங்கள் அதிகளவில் நம்பியிருக்கலாம்

பேர்ண் மாநிலத்தின் வளர்ப்பு ஆலோசனை (EB) என்பது ஒரு பக்கச்சார்பற்ற ஆலோசனை நிலையமாகும். எமது ஆண் மற்றும் பெண் உளவள ஊழியர்கள் உளவளத்துறையில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவுசெய்துள்ளதோடு மேலதிகமாக பாடசாலை உளவள மற்றும் வளர்ப்பு ஆலோசனையில் தொழிற்கல்வி பெற்றுள்ளார்கள் அத்துடன் அதிக வேளைகளில் சிகிச்சைத் தொழிற்கல்வியையும் பெற்றுள்ளனர். இவர்கள் இரகசியம் காக்கும் கடமைக்கு உட்பட்டவர்கள். குடும்பங்கள், இளையோர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இச்சேவை இலவசம-னதாகும். பேர்ண் மாநில வளர்ப்பு ஆலோசனை நிலையம் EB, பிறப்புத் தொடக்கம் தொழிலுக்கான ஆரம்ப- மற்றும் நடுத்தரப் பாடசாலைக் கல்விக்கு பொறுப்பானது.

### நீங்கள் எங்களை அழையுங்கள்

பெற்றோர் மற்றும் இளையோர்கள் தொலைபேசி மூலமாக உங்கள் அண்மையிலுள்ள பிரதேச செயலகத்தில் உங்களைப் பதிவுசெய்யலாம். பாடசாலைப் பிரச்சினைகளின்போது முதலில் நீங்கள் உங்கள் ஆசிரியர்களுடன் நிலைமை குறித்து கலந்துரையாடுங்கள். அவர்கள் உங்கள் சம்மதத்துடன் உங்கள் பிள்ளையை எழுத்து மூலமாகப் பதிவுசெய்வார்கள். தற்சமயம் உங்களுக்கு டொச் மொழியில் கலந்துரையாடுவதில் பிரச்சினை இருப்பின், மொழிபெயர்பதற்கு நீங்கள் எவரையாவது உதவிக்கு அழைத்து வந்தால் நாம் மகிழ்வடைவோம். அது இயலாது விட்டால் மொழிபெயர்ப்பதற்காக ஒரு நபரை நாம் அழைத்துக் கொள்வோம்.

### வழிகளைக் காணுதல்

வளர்ப்பு ஆலோசனை என்பது பேர்ண் மாநில கல்விப் பகுதியின் ஒரு உதவிச் சேவையாகும்.

www.be.ch/erziehungsberatung